நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கலைக்கல்லூரி முதல்வரின்
செயல்முறைகள்
<u>ஆணை பிறப்பிப்பவர்: முனைவர். கு.சுகுணா, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பி.எச்டி.,</u>
<u>முதல்வர் (முதல்நிலை)</u>

**<u>ந.க.எண்.282/இ/2019, நாள்: 19.03.2020</u>**

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – கல்லூரிக் கல்வித்துறை – நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கலைக்கல்லூரி –நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி–IV தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்டு பணிநியமனம் செய்யப்பட்ட **செல்வி/திருமதி. த.ரம்யா, இளநிலை உதவியாளர்** என்பாருக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: 1.தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடித ந.க.எண்.1018/PSD-G2/2019, நாள்.13.02.2019.
2. சென்னை–6, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.7881/பி1/2019, நாள்.28.02.2019.
3.சென்னை–6, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.7881/பி1/2019, நாள்.07.03.2019.
4.இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.282/இ/2019, நாள்.11.03.2019.
5.சென்னை–6, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.7881/பி1/2019, நாள்.03.12.2019.

---------

தமிழ்நாடு அமைச்சுப்பணியில் 2015–16, 2016–17 மற்றும் 2017–18 ஆம் ஆண்டுகளுக்குரிய தொகுதி–IV தேர்வின் மூலம் இளநிலைஉதவியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியலில் செல்வி த. ரம்யா (பதிவு எண்: 120311224) என்பவர் உள்ளதாக பார்வை –1 ல் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலாளரின் செயல்முறைகளில் குறிப்பிட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்வாளர் செல்வி த. ரம்யா என்பவரை மேற்கூறப்பட்ட சென்னை, ராணிமேரி கல்லூரியில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக பார்வை–2 ல் உள்ள கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளுக்கு பகுதிமாற்றமாக தேர்வாளர் செல்வி த. ரம்யா என்பவரை நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் பணியமர்த்தப்பட்டுள்ளதாக 07.03.2019 நாளிட்ட பார்வை –3ல் உள்ள கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் திருத்திய ஆணை வழங்கப்பட்டது.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கலைக்கல்லூரி முதல்வரின் 08.03.2019 நாளிட்ட செயல்முறைகளில் செல்வி. த. ரம்யா என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் நியமன ஆணை வழங்கி அனுப்பி வைக்கப்பட்டது.

தேர்வாளர் செல்வி. த. ரம்யா என்பவர் 11.03.2019 அன்று பிற்பகல் இவ்வலுவலகத்தில் காலியாக இருந்த இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். இத்தகவல் 11.03.2019 ஆம் நாளிட்ட இவ்வலுவலகக் கடிதத்தின்மூலம் நாமக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலரின் கடித எண் அ2/687/2019, நாள்.28.03.2019 மேற்கூறப்பட்ட தகவலுக்கு ஏற்பு அளிக்கப்பட்டுள்ளது.

அரசு தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க. எண்.000607/A2/2019, நாள்.16.12.2019 – ல் செல்வி த. ரம்யா என்பவரின் கல்வித்தகுதி சான்றுகள் **உண்மைத்தன்மை வாய்ந்தவை** என சான்றளிக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் நியமன நாள் முதல் நாளது தேதி வரை ஊதியமில்லா விடுப்பு ஏதும் எடுக்கவில்லை எனவும் அன்னாரின் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை எனவும் சான்றளிக்கப்படுகிறது.

கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 7881/பி1/2019, நாள்.03.12.2019 ல் செல்வி த. ரம்யா என்பவர் உள்ளிட்ட தேர்வாளர்களின் பணியை பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்து ஆணையிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆகவே "இப்பணிவரன்முறை தொகுதி–IV 2015–16, 2016–17 மற்றும் 2017–2018 பணி நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள இறுதி தீர்ப்பாணைக்கு உட்பட்டது."

என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர் செல்வி.த. ரம்யா என்பவரின் பணி தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் அன்னார் பணியில் சேர்ந்த நாளான 11.03.2019 முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

19/3/2020

முதல்வர்

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்
அரசினர் மகளிர் கலைக்கல்லூரி,
நாமக்கல் - 637 001.

19/3/2020

பெறுநர்:

1. செல்வி. த.ரம்யா,
   இளநிலை உதவியாளர்.
2. பணிப்பதிவேடு.
3. கல்லூரிக் கல்வி இயக்குநர்
   (அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)
4. உபரி நகல்.